கவனிக்க.- 2021.12.10 ஆந் திகதிய 2258 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2259 - 2021 දෙසැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2021.12.17
2259ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1786 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1791 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1788 | ஏல விற்பனைகள் | 1793 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1785- B 082297 - 405 (2021/12)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி அமைச்சு**

**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

**விலைமனுக் கோரல்**

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2022***

*கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக் கோரல்கள் 2021.12.31ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனு கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| வடமேல் மாகாணம் | குருநாகல் | நிக்கவெரட்டிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், குருநாகல். | நிக்கவெரட்டியைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.02.03 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | குருநாகல் | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், குருநாகல். | குருநாகலையைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.02.14 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | கல்கமுவ | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், குருநாகல். | கல்கமுவயைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.02.17 |
| தென் மாகாணம் | அம்பாந்தோட்டை | வீரகெட்டிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், காலி. | வீரகெட்டியவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.02.03 |
| வட மாகாணம் | மன்னார் | மன்னார் | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், வவுனியா. | மன்னாரைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2022.02.02 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்**.- அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப்

பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக்கற்கள் தயாரிப்பதற்கான இடவசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணபத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2021.12.31ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05,
2021, திசெம்பர் 03.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2021**

விலைமனுக் கோரல் விண்ணப்பப் படிவம்

கட்டிட உரிமையாளருக்காக :-

01. முழுப்பெயர் :-----------------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :-----------------------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :-----------------------------------------------------------------------------------------.
04. தேசிய அடையாள அட்டை இலக்கம் :------------------------------------------------------------------------.

கட்டிடம் தொடர்பாக :-

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :--------------------------
---------------------------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :-----------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :-------------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----------------------------------;
05. இடத்தின் விஸ்தீரணம் :------------------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :------------------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :---------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-----------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) :------------------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :-----------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

12-437

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

### நீதிவான் நீதிமன்றம் -சம்மாந்துறை

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

*சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.12.26 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.*

*இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.*

*இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.*

*ஐ.என். ரிஸ்வான்,*
*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*சம்மாந்துறை,*
*2021, திசெம்பர் 07.*

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம் 2021.11.14**

| *தொ.இல.* | *வழக்கிலக்கம்* | *வாகனம் பதிவு இல.* | *சான்றுப்பொருட்கள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 1 | 20503/PV/18 | EP TM-1092 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 2 | 21923/MT/19 | EP HX-8710 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | 23914/MT/20 | 159-0512 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 4 | 25428/MT/21 | EP TD-1360 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5 | 23482/MT/19 | EP TU-7627 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6 | 23910/MT/20 | 147-3469 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7 | B/5591/21 | 156-6686 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 8 | B/5061/20 | EP VG-1314 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 9 | B/5215/20 | EP UC-0102 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 10 | 25819/MT/21 | EP VE-0597 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 11 | B/5110/20 | EP MI-3668 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 12 | AR/2899/21 | | இரும்புத் தகடு | 02 |
| 13 | AR/2899/22 | | சவள் | 02 |

| தொ.இல. | வழக்கிலக்கம் | வாகனம் பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 14 | AR/2899/23 | | இரும்பு வாளி | 01 |
| 15 | AR/2899/24 | | இரும்பு சங்கிலி | 02 |
| 16 | 27106/Misc/21 | | இரும்பு வாளி | 02 |
| 17 | 27106/Misc/21 | | சவள் | 01 |
| 18 | 27070/Misc/21 | | சவள் | 01 |
| 19 | 27021/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 20 | 27012/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 21 | 27013/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 22 | 27014/Misc/21 | | சவள் | 01 |
| 23 | 26830/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 24 | 26830/Misc/21 | | சவள் | 01 |
| 25 | No Number | | மேசைத் தராசு | 03 |
| 26 | No Number | | தராசு | 02 |
| 27 | No Number | | இலத்திரனியல் தராசு | 01 |

*12- 456*

---

### நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு

### பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

*மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.12.26 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.*

*இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.*

*இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.*

*ஏ. சீ. ரிஸ்வான்,*
*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*மட்டக்களப்பு,*
*2021.12. 08.*

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை | தீர்மானித்த விலை | விற்ற விலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5882/E/19 | WS-3156 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 | 15,000.00 | |
| 2 | 64454/E/21 | | அடுப்பு | 01 | | |
| 3 | 64454/E/21 | | சிலிண்டர் | 01 | | |
| 4 | 64454/E/21 | | பரல் | 02 | | |
| 5 | 64482/E/21 | | பரல் | 02 | | |
| 6 | 64518/S/21 | | சீமெந்து 50 Kg | 01 | | |
| 7 | 64520/S/21 | | சீமெந்து 50 Kg | 02 | | |
| 8 | 64322/S/21 | | துவிச்சக்கர வண்டி | 01 | | |
| 9 | 64323/S/21 | | துவிச்சக்கர வண்டி | 01 | | |
| 10 | 64324/S/21 | | துவிச்சக்கர வண்டி | 01 | | |
| 11 | 64325/S/21 | | துவிச்சக்கர வண்டி | 01 | | |
| 12 | 64326/S/21 | | துவிச்சக்கர வண்டி | 01 | | |
| 13 | 64327/S/21 | | துவிச்சக்கர வண்டி | 01 | | |
| 14 | 63638/S/21 | | தராசு | 01 | | |
| 15 | 63878/S/21 | | சவள் | 01 | | |
| 16 | 61414/S/20 | | சவள் | 01 | | |
| 17 | 63631/E/21 | | வெற்று பரல் | 01 | | |
| 18 | 63632/E/21 | | வெற்று பரல் | 01 | | |
| 19 | 64301/E/21 | | வெற்று பரல் | 01 | | |
| 20 | 64595/E/21 | | அலுமினிய சட்டி, குடம் | 02 | | |

12-559

---

**நீதிவான் நீதிமன்றம் - மல்லாகம்**

**ஏல விற்பனை அறிவித்தல்**

23.04.2021 ஆந் திகதி அரச வர்த்தமானியில் வெளிவந்த மல்லாகம் நீதிவான் நீதிமன்ற ஏலவிற்பனை Covid -19 காரணமாக உரிய திகதியில் நடைபெறாமையினால் குறித்த ஏல விற்பனை எதிர்வரும் 2021.12.23 ஆந் திகதியன்று நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஏ. ஜீ. அலெக்ஸ்ராஜா,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்.

12-509

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் நிலை மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

### சி எல் சினர்ஜி ( பிரைவேட்) லிமிடெட்- பிவி 489

" சி எல் சினர்ஜி ( பிரைவேட்) லிமிடெட்" தனது நிலையை 2021, திசெம்பர் 09 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் "சி எல் சினர்ஜி லிமிடெட்" என நிலையை மாற்றுவதற்கான நிறுவனத்தின் சிறப்புத் தீர்மானத்தின்படி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

பினான்சியல் அன்ட் பிசினஸ்
அசோசியேட் (பிரைவேட்)
லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்.

12- 466

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

உடபுளத்கம, அம்பகமுவ என்ற முகவரியில் வதியும் வெலிகல கெதர வில்மன் பெரேரா ஆகிய நான், உடபுளத்கம, அம்பகமுவ என்ற முகவரியில் வதியும் ஷசிக்கா ஷெனாலி அலுகொள்ளகே என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து செயலற்றதாக்கியுள்ளேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இதன் பிறகு சொல்லப்பட்டவரால் எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புச் சொல்ல மாட்டேன் என்பதையும் அறியத்தருகிறேன்.

12- 419

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தற்போது இல. 320/B/18/1, Dr. கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 2 என்ற முகவரியில் வசிக்கும் ஒர்வீன் பெரனடெற் மயோறிஸ் ( இல. 87379663 சுவீடன் கடவுச்சீட்டை உடையவர் ஆகிய நான், இல. 25C, லக்சிறி, 2 ஆவது ஒழுங்கை, பெரமுன மாவத்தை, எல்தெனிய, கடவத்த என்ற முகவரியைச் சேர்ந்த ஹெட்டியாதுர லக்ஷி ஜானக மென்டிஸ் கருணாரத்னவுக்கு (இல. 680640602 தேசிய அடையாள அட்டையை உடையவர்) என்னால் வழங்கப்பட்ட 2016, யூலை 18 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி அதிகாரம் 2021, நவெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து என்னால் நீக்கப்பட்டு, இரத்துச் செய்யப்பட்டு மற்றும் செல்லுபடியற்றதாக்கப்பட்டது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொதுமக்களுக்கும் மற்றும் அரசாங்கத்திற்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

12- 420

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாதம்பை, எகொடவத்தை, 3 ஆவது ஒழுங்கை, 38 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த விக்ரம ஆரச்சிகே லாலித கருணா சுதசிங்க அல்லது சுரங்க லாலித ஆகிய நான், மஹாவெவ, பஹல மஹாவெவ இலக்கம் 26 ஐச் சேர்ந்த பிரம்மச்சாரிகே கருணாவதிக்கு மாரவில பிரசித்த நொத்தாரிசு எச். ஜே. எம். டி. ஜயசிங்கவினால் அத்தாட்சி செய்யப்பட்ட 22777 ஆம் இலக்கமும் 2014.05.30 ஆந் திகதியும் உடைய விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் வழங்கிய தத்துவங்களை உடனடியாக இரத்துச் செய்து விட்டேன் என்பதை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசுக்கும், பொது மக்களுக்கும் அறிவிக்கின்றேன். மேற்குறிப்பிடப்பட்ட பிரம்மச்சாரிகே கருணாவதி இனிமேல் இந்த விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

விக்ரம ஆரச்சிகே லாலித கருணாசுதசிங்க
அல்லது சுரங்க லாலித.

2021.11.30.

12-421

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிட்டகோட்டே, எப்பிட்டமுல்ல வீதி, இலக்கம் 185/01 இல் வசிக்கும் சூலஸ்வர்ண மடுகல்ல ஆகிய நான், குருநாகல் மாவட்டம், பாணகமுவ, குருமட போஸ்ட் என்ற முகவரியில் வசிக்கும் முகம்மது லஹீர் , மொஹொமட் நவுஃபல் என்பவருக்கு வங்கப்பட்டதும்,

குருநாகல் பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான திரு. தயா குணதிலக்க என்பவரினால் 2019.10.26 ஆந் திகதி 14948 என்ற இலக்கத்தின் கீழ் பதிவாளர் நாயகத்தின் புத்தகத்தில் அத்தியாயம் 142 பக்கம் 11924 குறிப்பு 3764 இன் கீழ் 2019.10.30 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதுமான

அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சூலஸ்வர்ண மடுகல்ல.

2021.12.05.

12-435

---

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தை மீளம் பெறல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது அற்றோணித் தத்துவப்பத்திரம் 1289 என இலக்கமிடப்பட்ட 2016.07.05 ஆந் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு இந்துமதி காவேரி லட்சுமனன் முகதாவில் இலக்கம் 44/1A, தபாற் கந்தோர் வீதி, திருகோணமலை எனும் முகவரியைச் சேர்ந்த மகாரட்னம் பிரேங் செல்வகுமார் ( தே.அ.அ.இல. 642470493V) என்பவரின் பெயரில் 1047, Casavani Road, Laval, H 7W, 5G5, Canada தற்போது 935, 100e, Avenue. Laval, H7W, 4A2, Canada எனும் முகவரியுடைய பெருமாள் பாலகுமார் ஆகிய என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் 2021.10.08 ஆந் திகதி முதல் மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. அன்று முதல் அற்றோணித்தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

12-451

---

## அற்றோணித் தத்துவத்தினை மீளப்பெறுதல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது அற்றோணித் தத்துவப்பத்திரம் 2016.06.22 ஆந் திகதியிடப்பட்ட லூயிஸ் தம்பிநாயகம் , சொலிசிடர் Authorized to administer Qaths, Hodders Law Ltd, 516, Brixton Road, London SW9 8EN முகதாவில் இலக்கம் 44/ 1A, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை எனும் முகவரியைச் சேர்ந்த மகாரட்ணம் பிரேங் செல்வகுமார் (தே.அ.அ.இல. 642470493V) என்பவரின் பெயரில் இல. 44, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை தற்போது at 41, Fitz Roy Avenue , Harbone, Birmingham, B 17 8 RL, United Kingdom எனும் முகவரியைச் சேர்ந்த Dr. பெருமாள் ஆனந்தகுமார் ( கடவுச்சீட்டு இல. N 5209480) ஆகிய என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2021.10.08 ஆந் திகதி முதல் மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. அன்று முதல் அற்றோணித்தத்துவகாரரால் மேற் குறிப்பிட்ட அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

12- 452

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பிலியந்தல, சித்தமுல்ல, சரத் அல்விட்டிகல மாவத்தை, சஜானா பிளேஸ், இலக்கம் 47 ஐச் சேர்ந்த தற்போது ஐக்கிய அமெரிக்காவில் என்ஜே 07003 , புளூம்பீல்ட், வெஸ்னற் றெறஸ், இலக்கம் 22 இல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 194782210068 மற்றும் இலங்கை கடவுச்சீட்டு இலக்கம் N 8439625 உடைய பார்பரா தெரேஸ் நடேசன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிப்பது யாதெனில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. ஆர். நாணயக்காரவால் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 1224 உடைய விசேட அற்றோணி அதிகாரப் பத்திரம் மூலம் என்னால் எனது அற்றோணி அதிகாரம் உடையவராக நியமிக்கப்பட்ட பிலியந்தல, சித்தமுல்ல, சரத் அல்விட்டிகல மாவத்தை, சஜானா பிளேஸ், இலக்கம் 47 ஐ உடைய நிலையத்தில் வசிக்கும் ரானியா லூசிலி செனெவிரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட கூறப்பட்ட இலக்கம் 1224 ஐ உடைய விசேட அற்றோணி அதிகாரப்பத்திரம் என்னால் இரத்துச் செய்யப்படுவதாகவும் இப்போதிலிருந்து கூறப்பட்ட அற்றோணி தத்துவகாரரால் செய்யப்படும் எந்த வொரு நடவடிக்கையும் செல்லுபடியற்றது என்பதையும் அந்த அற்றோணி அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

பார்பரா தெரேஸ் நடேசன்.

12-453

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மல்லாவி யோகபுரம், இலக்கம் 6D/ A இல் வசிக்கின்ற நமசிவாயம் வசந்தகுமார் ( தேசிய அடையாள அட்டை இல. 740063855V) ஆகிய எனக்கு, வவுனியா பிரசித்த நொத்தாரிசு ஏ. அருன்னியா அவர்களால் 2018.10.13 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்திய பதிவாளர் அலுவலகம் - வடக்கு வலய அலுவலகம், யாழ்ப்பாணத்தில் 2019.01.30 ஆந் திகதிய "வொலுயும் 118", நிரல் "49" நாட்புத்தக இலக்கம் 283 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 127 உடைய விசேட அற்றோணி அதிகாரப்பத்திரம் மூலம் வவுனியா, முல்லைத்தீவு, துணுக்காய், குலசிங்கம் வீதி, இலக்கம் 8D என்னும் முகவரியில் வசிக்கின்ற விமலாதேவி விஜயரஞ்சித் ( தேசிய அடையாள அட்டை இல. 636672610V) இலக்கம் 127 என்பவரின் அற்றோணி அதிகாரப்

பத்திரத்தை 2021.12.10 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்கியது பற்றியும், இனிமேலும் கூறப்பட்ட அற்றோணி அதிகாரப் பத்திரம் மூலம் விமாலதேவி விஜயரஞ்சித் ஆகியவர் சார்பில் மற்றும் அவருடைய பெயரில் செய்யப்பட்ட எந்தவொரு செயலும் இரத்துச் செய்யப்பட்ட தினத்தின் பின்னர் செல்லுபடியோ அல்லது சட்டபூர்வ அதிகாரமோ அற்றதெனவும், இலங்கை அரசாங்கமும் அனைத்து பொது மக்களும் ஏனைய அனைவரும் இத்தால் அறிந்து கொள்ளவும்.

நமசிவாயம் வசந்தகுமார்,

(தேசிய அடையாள அட்டை இலக்கம் 740063855V)

12- 478

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு பகிரங்க நொத்தாரிசு டீ. எஸ். வெலுவங்க மூலம் 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலக்க 2604 கொண்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் ஐகெயா மார்கட்டின் பிறைவட் லிமிடெட் பணிப்பாளர் மொஹமட் ஹனீபா மொஹமட் நவாப் மூலம் ரன்பிம ஹோல்டிங்ஸ் லங்கா பிறைவட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இன்று தொடக்கம் இரத்துச் செய்யப்படுகிறது என்பதை அறியத்தருகிறோம்.

12-514

## ஏல விற்பனைகள்

இந்த ஏல விற்பனையானது Covid - 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

### அமானா வங்கி பீஎல்சீ

### அக்கரைப்பற்று கிளையின் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் சட்டம்) 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

அமானா வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மொஹமட் பஷிர் நிஸாம் மொஹமட் இஸ்மாயில் நிஸ்ரினா மற்றும் மொஹமட் பஷிர் அஹமட் ஷாப்ரி ஆகியோர் கடப்பாடுடையவர்களாக அமானா வங்கி பீஎல்சீ யினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**முதலாம் விற்பனை**: 2022.01.20ஆந் திகதி பி.ப.1.45 மணிக்கு.

**ஆதன விபரம்**: கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு, அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட, கருங்கொடிதீவு கிராமத்தில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் A.G. மொஹமட் தையூப் அவர்களினால் அண்மையில் தயாரிக்கப்பட்ட 2014.08.25 ஆந் திகதிய MT/174/14 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 01 என அடையாளமிடப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும். இக் காணியானது 4.82 பேர்ச் அல்லது 0.0122 ஹெக்டயார் பரப்பளவுடையது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகிலிருந்து பொத்துவில் பாதையில் சுமார் 400 மீற்றர் வரை வந்து இடது பக்கம் ஈஸ்ட் ரோட் ( East Road) பாதையில் உட்பிரவேசித்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர் வரை வந்து இடது பக்கம் ஐஸ் மில் ரோட் (ICE Mill Road) பாதையில் உட்பிரவேசித்து சுமார் 100 மீற்றர் வரை வந்து இடது பக்கம் திரும்பி சுமார் 50 மீற்றர் வரை வந்து வலது பக்கம் திரும்பி அப்பாதையில் சுமார் 30 மீற்றர் வரும் போது சொல்லப்பட்ட ஆதனமானது அப்பாதைக்கு முன் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

**இரண்டாம் விற்பனை**: 2022.01.20 ஆந் திகதி பி.ப.3.30மணிக்கு

**ஆதன விபரம்**: கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவு, அட்டாளைச்சேனை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, அக்கரைப்பற்று தைக்கா நகர் , அட்டாளைச்சேனை -16 கிராம அலுவலர் பிரிவு, அட்டாளைச்சேனை கிராமத்தில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் A.A. மொஹமட் தஸ்லின் அவர்களினால் அண்மையில் தயாரிக்கப்பட்ட 2015.01.28 ஆந் திகதிய T/ 2062 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் A என அடையாளமிடப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டும் ( இல. T/ 1471 வரைபடத்தில் லொட் 1 காணித்துண்டின் மீளளவையாகும்) மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும். இக்காணியானது 5.1 பேர்ச். அல்லது 0.0130 ஹெக்டயார் பரப்பளவுடையது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகிலிருந்து கல்முனை பாதையில் சுமார் 2.5 கி.மீ. அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று எல்லை பாதை வரை வந்து வலது பக்க எல்லை பாதையின் ஊடாக சுமார் 500மீற்றர் வளைவை கடந்து தைக்கா நகர் டிரைனேஜ் பாதை வரை வந்து இடது பக்கம் டிரைனேஜ் பாதையின் ஊடாக சுமார் 50 மீற்றர் வரை வரும் போது சொல்லப்பட்ட ஆதனமானது அப்பாதைக்கு முன் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2021.02.05 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2021.02.05 ஆந் திகதிய "திவயின", 'டேலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.00.

கொள்முதலில் மிகுதி 90%உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அமானா வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "முகாமையாளர், அமானா வங்கி பீஎல்சீ, இல.486, காலி வீதி, கொழும்பு 3 ". தொலைபேசி: 011- 7756000 Ext 2112.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 081- 2210595, 071- 8446374, 071- 4962449.

12-469

---

இந்த ஏல விற்பனையானது Covid -19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

### அமானா வங்கி பீஎல்சீ

### கிண்ணியா கிளையின் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் சட்டம்) 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

அமானா வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபுர்தீன் மொஹமட் அலீ என்பவர் கடப்பாடுடையவராக அமானா வங்கி பீஎல்சீயினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**முதலாம் விற்பனை**: 2022.01.19ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு

**ஆதன விபரம்**: கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பத்து, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு, கிண்ணியா கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, கிண்ணியா நகர சபை எல்லைக்குட்பட்ட, சின்ன கிண்ணியா கிராமத்தில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் மற்றும் மதிப்பீட்டாளர் N. பாரூக் அவர்களினால் அண்மையில் தயாரிக்கப்பட்ட 2016.06.07 ஆந் திகதிய 1777 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 என அடையாளமிடப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும். இக்காணியானது 01 றூட், பரப்பளவுடையது.

**ஆதனத்தை வந்தடைதல்**.-கிண்ணியா புஹாரி சந்தியிலிருந்து பிரதான பாதையில் கிண்ணியா- தம்பலகாமம் பிரதான பாதையில் மட்டக்களப்பு நோக்கி சுமார் 1.3 கி.மீ. பழைய வைத்தியசாலை சந்தி வரை வந்து வலது பக்கம் திரும்பி மட்டக்களப்பு பாதை ஊடாக 450 மீற்றர் வரை வரும் போது சொல்லப்பட்ட ஆதனமானது பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**இரண்டாம் விற்பனை**: 2022.01.19 ஆந் திகதி பி.ப.2.30மணிக்கு

**ஆதன விபரம்**: கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பத்து, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு, கிண்ணியா கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, கின்னியா நகர சபை எல்லைக்குட்பட்ட, சின்ன கிண்ணியா கிராமத்தில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளாக் மற்றும் மதிப்பீட்டாளர் N. பாரூக் அவர்களினால் அண்மையில் தயாரிக்கப்பட்ட 2018.04.27 ஆந் திகதிய 3799 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 என அடையாளமிடப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டும் உரிமம் பெற்ற நில அளவையாளர் மற்றும் மதிப்பீட்டாளர் K. செல்லப்பிள்ளை அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1998.12.17 ஆந் திகதிய 1005 ஆம் இலக்க வரைபடத்தின் லொட் 01 மற்றும் லொட் 2 கிண்ணியா தோட்டம் எனும் காணியின் காணித்துண்டாகும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும். இக்காணியானது 32.5 பே. பரப்பளவுடையது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- கிண்ணியா புஹாரி சந்தியிலிருந்து பிரதான பாதையில் கிண்ணியா- தம்பலகாமம் பிரதான பாதையில் மட்டக்களப்பு நோக்கி சுமார் 1.3 கி.மீ. பழைய வைத்தியசாலை சந்தி வரை வந்து வலது பக்கம் திரும்பி மட்டக்களப்பு பாதை ஊடாக 450 மீற்றர் வரை வரும் போது உள்ள சிறிய சந்தியில் (Minor Junction) வலது பக்கம் திரும்பி அப்பாதையில் சுமார் 120 மீற்றர் வரை வந்து மீண்டும் வலது பக்கம் திரும்பி அப்பாதையில் சுமார் 30 மீற்றர் வரும்போது காணப்படும் தனியார் ஒழுங்கை ஊடாக சுமார் 10 மீற்றர் வரை வந்து வரும் போது சொல்லப்பட்ட ஆதனமானது இவ் ஒழுங்கையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2020.12.18 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2020.12.18 ஆந் திகதிய "திவயின", 'டேலி மிரர்' மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு மற்றும் வேறு செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.00.

கொள்முதலில் மிகுதி 90%உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அமானா வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "முகாமையாளர், அமானா வங்கி பீஎல்சீ, இல.486, காலி வீதி, கொழும்பு 3 ". தொலைபேசி: 011- 7756000 EXT 2112.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 081- 2210595, 071- 8446374,
071- 4962449.

12- 467

---

இந்த ஏல விற்பனையானது Covid - 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

**அமானா வங்கி பீஎல்சீ**

**அக்கரைப்பற்று கிளையின் பகிரங்க ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் சட்டம்) 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

அமானா வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எம். ஐ.எம். ஸ்டோர்ஸ் எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனி வியாபாரத்தை நடாத்திச் செல்லும் மொஹமட் இஸ்மாயில் முபீஸ் என்பவர் கடப்பாடுடையவராக அமானா வங்கி பீஎல்சீ யினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தி என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2022.01.20ஆந் திகதி பி.ப.2.30 மணிக்கு

**ஆதன விபரம்**: அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவு, ஆலையடிவேம்பு பிரதே சபை எல்லைக்குட்பட்ட, கருங்கொடிதீவு- 09 இல் அமைந்துள்ள "கண்டக்குழி" என்றழைக்கப்படும் காணி கல்முனை காணிப்பதிவகத்தில் முறையே M 208/164 மற்றும் M 133/79 இல் பதிவு செய்யப்பட்டுள்ள காணி 03றூட், 05 பேர்ச் மற்றும் 01 ஏக்கர், 02 றூட் பரப்பளவான காணிகள் ஒன்றிணைக்கப்பட்ட காணி 02 ஏக்கர், 37.7 பேர்ச் பரப்பளவான காணியும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் சகலதுமாகும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகிலிருந்து பொத்துவில் பாதையில் சுமார் 1.2கி.மீ. தூரம் சென்றால் பாதையில் வலது பக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது. (MIM அரிசி ஆலை என இனங் காணலாம்.)

